# திருவெண்காட்டுத்

# திருப்பதிகங்கள்

தருமபுர ஆதீனம்.



தருமபுர ஆதீன மடாலயத் தோற்றம்



திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம்
௨௫-வது மகாசந்நிதானம்
ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணியதேசிக
ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

வெளியீடு எண் 104.

உ
குருபாதம்
திருச்சிற்றம்பலம்

# திருவெண்காட்டுத் திருப்பதிகங்கள்

இது
திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம்
உருவது மகாசந்நிதானம்
ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணியதேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்
திருவுள்ளத்தின்படி
வெளியிடப்பெற்றது.

தருமபுர ஆதீனம்
1946

# பதிப்புரை

திருக்கயிலாயபரம்பரைத் தருமபுர ஆதீனம் உடு-வது மகாசந்நிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் சமய வளர்ச்சி கருதி ஆற்றி வரும் பணிகள் பலவாகும். அவைகளுள் திருப்பதிகங்கள் கொண்ட 274 சிவஸ்தலங்களிலும் ஆதீனச் சார்பில் சிறப்பாக அபிஷேக ஆராதனைகள் செய்வித்து, அந்தந்தத் தலப்பதிகங்களையும் ஆங்காங்கு முறைப்படி ஓதுவித்து, ஆராதனை முடிவில் அத் தலப்பதிகங்கள் அடங்கிய புத்தகங்களை அன்பர்கட்கு வழங்குதலும் ஒன்றாகும். ஆதலின் அவர்கள் திருவுள்ளப்பாங்கின்படியே **திருவெண்காட்டுத் திருப்பதிகங்கள்** என்னும் இந்நூல் ஆதீன வெளியீடாக வெளிவந்துள்ளது. அன்பர்கள் பதிகங்களைப் பாராயணஞ்செய்து **ஸ்ரீ சுவேதாரண்யேசுவரர்** திருவருளால் எல்லாநலங்களும் பெற்று உய்வார்களாக.

# தலக்குறிப்பு

விருந்தினனாகி வெண்காடதனில்
குருந்தின்கீழன்று இருந்தகொள்கையும்
—திருவாசகம்.

பூவிரிபொழில்சூழ் காவிரிவளம் பெறும் சோழநாட்டில் சிவஸ்தலங்கள் பலவுளவேனும் தேவாரப்பதிகங்கள் பெற்றன 190 தலங்களே யாகும். அவைகளுள் காவிரியின் வடகரைத்தலங்கள் 63. அதனுள் திருவெண்காடு என்னும் இத்தலம் 11வதாக எண்ணப் பட்டுள்ளது. இதனைச்சுற்றித் திருச்சாய்க்காடு, பல்லவனீச்சரம், திருவலம்புரம், கீழைத் திருக்காட்டுப்பள்ளி, திருக்கலிக்காமூர் ஆகிய சிவஸ்தலங்கள் இருக்கின்றதோடு திருநகரி, திருநாங்கூர் என்ற இரு வைணவத் தலங்களும் இருக்கின்றன. இதன் வடமொழிப் பெயர் சுவேதாரண்யம் என்பது. சுவேதம்= வெண்மை, ஆரண்யம்=காடு.

இடம்:- தஞ்சை ஜில்லா சீகாழி தாலுக்காவில் உள்ளது. சீகாழிப் புகைவண்டி

நிலயத்திலிருந்து தென்கிழக்கே 7 - கல் தொலைவிலிருக்கிறது. மட்சாலை வழியாகச் செல்லவேண்டும்.

சிறப்பு:- 'வெண்காடே வெண்காடே என் பீராகில் வீடாத வல்வினைநோய் வீட்ட லாமே' என்பது அப்பர் அருள்வாக்கு. காசிக்குச் சமானமான தலங்களுள் இதுவும் ஒன்று. மூர்த்தி, தலம், தீர்த்தம், ஆகிய ஒவ்வொன்றும் மூம் மூன்ருக விளங்குவது. மெய்கண்டார் அவதார ஸ்தலமும் இதுவே. பாரனைத்தும் பொய்யெனத்துறந்த பட்டி னத்துப் பிள்ளையார் சிவபூஜை பெற்றுக் கொண்ட பெருமையுடையது. ஐராவதம் துருவாசர் கொடுத்த மலரைச் சிந்தியதால் தனக்கு ஏற்பட்ட சாபத்தினைப் போக்கிக் கொண்டதும், இந்திரன் விருத்திராசுரனைக் கொன்றதால் தனக்கு ஏற்பட்ட பிரம பாத கத்தைப் போக்கிக்கொண்டதும் இத்தலத் திலேதான். ஐராவதத்தினுல் அமைக்கப் பட்ட தீர்த்தம் யானைமடு என இக்காலத் தில் வழங்குகின்றது. மற்றும் சுவேதகேது, சுவேதன், வேதராசி ஆகியோர்களும் இத் தலப்பெருமானைப் பூசித்து வணங்கி அதனுல்

'நமன் தூதர் ஆலமிடற்ருன் அடியார் என்றடர அஞ்சுவரே' என்ற ஞானசம்பந்தர் அருந்தமிழுக்கு இலக்காய் விளங்கினுர்கள் என்று தலபுராணங் கூறுகின்றது. காவிரி சங்கமஸ்நானம் செய்யச் செல்கின்றவர்கள் ஒவ்வொருவரும் திரும்புங்கால் இங்கும்வந்து முக்குளநீராடிச் செல்வது இன்றும் பார்க்கத் தக்கது.

•

மூர்த்திகள்:- இறைவனுக்கும் அம்மையாருக்கும் தனித்தனி ஆலயம் உள்ளது. மற்றும் நவக்கிரகங்களுள் ஒன்ருகிய புதனுக்குரிய தலம் இதுவாதலின் புதன் கோயிலும் ஒன்று உள்ளது. இறைவன் திருநாமம் **சுவேதாரண்யேசுவரர்.** இறைவி திருநாமம் **பிரமவித்தியாநாயகி.** இத்தலத்தின் மற்ெருரு பெயராகிய ஆதிச்சிதம்பரம் என்பதற்கு ஏற்ப நடராஜப்பெருமானுக்குச் சிதம்பரத்தில் நடைபெறுவதுபோலவே ஆறு அபிஷேகங்களும், ஆனித்திருமஞ்சனமும், மார்கழித் திருவாதிரையும் நடைபெறுகின்றன. அகோர மூர்த்தி எழுந்தருளியிருப்பதும் இத்தலத்திற்கு ஓர் தனிச்சிறப்பாகும். இம்மூர்த்திக்கு

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் இரண்டாங்காலத்தில் விசேஷ அபிஷேக ஆராதனை நடைபெறுகின்றது. இது அகோரபூஜை என்று வழங்கப்பெறும். ஏராளமான மக்கள் அன்று வந்து வழிபட்டுச்செல்லுகின்றார்கள். ஏனைய நாட்களில் காலசந்தியில் மட்டும் ஒரு அபிஷேகம் நடைபெறுகின்றது.

**தீர்த்தம்:-** அக்கினி தீர்த்தம், சூரிய தீர்த்தம், சந்திரதீர்த்தம் என்பனவாம். இவை பொதுவாக முக்குளதீர்த்தம் எனக் கூறப்படும். அம்மையார் வேண்டுகோட்படி இறைவன் நடனஞ் செய்யுங்கால் முக்கண்களினின்றும் மூன்று நீர்த்துளிகள் சிந்தின என்றும், அவைகள் விழுந்த இடம் முக்குளங்களாய் விளங்குகின்றன என்றும் கூறப்படுகின்றது. மக்கட்பேறு விரும்பினோர்கள் பலர் இங்கு வந்து சிலநாட்கள் தங்கி நியமத்தோடு ஒவ்வொருநாளும் முக்குள நீராடி இறைவனை வழிபட்டு மகப்பேற்றினை அடைகின்றார்கள் என்பது இன்றும் காணத்தக்கதொன்றாகும்.

**தலவிருக்ஷம்:—** வில்வம், கொன்றை, வடவால் என மூன்றுள்ளன. வடவாலமரத்தி

ணடியில் பிதுர்க்கடன் செய்தால் மிக்க பய
னளிக்குமென்று கருதி அநேக மக்கள் வந்து
முக்குள நீராடிப் பிதுர்க்கடன் செய்து செல்
கின்றார்கள்.

அகோரமூர்த்தி:- மருத்துவன் என்னும்
அசுரன் தேவர்களுக்கு இடர்செய்தானாக,
தேவர்கள் யாவரும் இறைவனிடத்தில் விண்
ணப்பித்து அவன் கட்டளைப்படியே இத்
தலத்திற்குவந்து வேற்றுவடிவங் கொண்டு
தவம்புரிந்தார்கள். தேடியும் தேவர்களைக்
காணாத மருத்துவன் உண்மையறிந்து இத்
தலத்திற்கு வந்து போர்செய்யத் தலைப்பட்
டான். கருணாமூர்த்தியாகிய சுவேதவனப்
பெருமான் ஏவலினால் இடபதேவர் எதிர்த்
துப் போர்செய்தார். மருத்துவன் போருக்குத்
தோற்று இறைவனைக் குறித்துத் தவஞ்
செய்து, ஓர் சூலாயுதம் பெற்று மீண்டும்
இத்தலத்திற்கு வந்து போர்செய்ய முற்பட்டு
இடபதேவர்மீது அச்சூலாயுதத்தை ஏவி
னான். அது இடபதேவரது கொம்புகளை
முறித்துக் காதுகளையும் அறுத்தது. இடப
தேவரும் சிவபெருமானால் கொடுத்தருளப்

பட்ட சூலாயுதத்திற்கு அஞ்சி, சுவேதவனப் பெருமானிடம் சென்று விண்ணப்பித்தனர். சுவேதனப்பெருமான் மருத்துவன்மீது பெருங் கோபங்கொண்டருளினர். உடனே அக் கோபம் எதிர்தோன்ற இறைவனும் அதனை நோக்கி "மருத்துவனைச் சங்கரித்துவருக" என ஆக்ஞாபித்தார். அக்கோபம் எரி போலும் சிவந்த குஞ்சியுடன் அகோர வடிவாகி நெற்றிக்கண் அனலைக்கக்க, ஆபரணங்கள் பிரகாசிக்க, கண்டாமாலை யணிந்து, துடி மணி பலகை வாள் சூலம் வெண்டலை கடி என்பவைகளைக் கரங்களில் தாங்கி அசுரனைச் சமீப்பித்தஉடனே அசுரன் பயந்து ஒளியுருவாகி அகோரமூர்த்தியின் திருவுருவிற் கலந்தனன். பின்னர் அவ் வகோரமூர்த்தி தேவர்களது வேண்டுகோட் கிணங்கி நடராஜப்பெருமான் சபையின் வடமேற்குப் பாகத்தில் எழுந்தருளுவா ராயினர்.

**மெய்கண்டார்:-** பெண்ணாகடத்தில் வசித்து வந்த அச்சுதகளப்பாளர் என்னும் சைவ வேளாளர் நெடுங்காலம் மக்கட்பேறின்மையினல் வருந்தித் திருத்துறையூரிலே வதிந்து

வந்த தமது குலகுருவாகிய 'சகலாகம பண்டிதர் என்னும் அருணந்திசிவாசாரியரிடம் சென்று விண்ணப்பித்தார். வடமொழி வேதங்களையும் பன்னிரு திருமுறைகளையும் நன்கு ஆராய்ந்து தெளிந்த அவ்வாதிசைவர் திருமுறைகளிடத்துள்ள பெரும்பற்றினுல் திருமுறைகளை விதிப்படி பூசித்துக் கயிறு சாத்திப்பார்த்தனர். "பேயடையா பிரிவெய்தும் பிள்ளையினேடுள்ளம்நினை வாயினவே வரம்பெறுவர்" என்றுதொடங்கும் இத்தலத் திருப்பதிகப் பாடல் அகப்பட்டது. உடனே குருவாணைப்படி அச்சுதகளப்பாளர் இத்தலத்திற்கு வந்து நாடோறும் முக்குளநீராடிப் பெருமானையும் அம்மையாரையும் நியதியுடன்வழிபட்டு வருவாராயினர்.

இறைவன் கனவிற்ருேன்றி "அன்பனே! இப்பிறவியில் மகப்பேறெய்தும் பான்மை நினக்கு இல்லை" என்றருளினர். உடனே களப்பாளர் வணங்கி "பெருமானே மகப்பேறு அரசமரபுக்கே முக்கியமானது. ஆதலால அடியேனுக்குப் புத்திரப்பேறு முக்கியமில்லை. ஆனுல் தேவரீர் ஆணைப்படி உமையம்மையாரது திருமுலைப்பாலை அருந்திச் சிவ

ஞானம் பெற்ற ஆளுடைய பிள்ளையாரது திருவாக்கு அடியேன் காரணமாக வழுவுதல் வேண்டுமோ'' என்றனர். களப்பாளருக்குத் திருமுறைகளின்மீது ஏற்பட்டுள்ள அன்பை உணர்ந்த இறைவனார் 'அன்பனே நீ விரும்பிய படி ஞானசம்பந்தன் போன்ற மகவினைப் பெற்று வாழ்தி' என்று அருள்புரிந்தனர். களப்பாளரும் மனமகிழ்ந்து நித்தியகடன் களிற் றவருது ஒழுகுவாராயினர். அவரது மனைவியாரும் கருவுற்றுப் பத்துத்திங்கள் கழிந்தவுடன் சைவசித்தாந்த இளஞ் செஞ் ஞாயிறுகிய ஒரு ஆண் மகவை ஈன்றனர். அப்பிள்ளையின் திருநாமம் சுவேதவனப்பெரு மான் என்பதாகும். இவரே பரஞ்சோதி யாரால் சிவஞானோபதேசமும் **மெய்கண்டார்** என்னும் தீக்ஷா நாமமும் பெற்றுத் தமது பிறப்புக்குக் காரணராகவும் குலகுருவாக வும் விளங்கிய அருணந்தி சிவாசாரியாரைத் தமது முதல் மாணாக்கராகக்கொண்டு விளங் கிச் **சிவஞானபோதம்** என்னும் சைவசித்தாந் தத் தலைமணி ஞானநூலினை இயற்றியருளிய வராவர். புறச்சந்தான குரவர்களுள் முதல் வராக வைத்துப் போற்றப்படுபவரும்இவரே.

# தலத்திருப்பதிகக்குறிப்பு

**தலம்:-** மேகத்தைத் தடவும் படியான உயர்ந்த மரங்கள் நிறைந்த சோலைகளால் சூழப்பெற்றது இத்தலம். வயல்களும் ஒருபால் அழகுசெய்கின்றன. ஆயினும் ஓர்புறம் கடல் அழகுபடுத்துகின்றது. குளத்தில் தெரிகின்ற தாமரைமலரின் நிழலைக்கண்ட கெண்டைமீன்கள் அதனைக் குருகென்று கருதிப் பயந்து அருகேயுள்ள தாமரைப் பூக்களில் மறைகின்றன. இத்தகைய அறியாமையோடு கூடிய நிகழ்ச்சியைக் கடலிடத்துண்டான முத்துக்கள் கண்டு பற்கள் தோன்ற நகைக்கின்றன. மற்றும் மயில்கள் ஆடுகின்றன. அவ்வாட்டத்திற்கு ஏற்ப கடல் முழங்குகிறது. வண்டுகள் இசையினை எழுப்புகின்றன. அந்தணர்களும் இத்தலத்தில் விரும்பி யிருக்கின்றார்கள். வெண்டாமரை மலர்மீது கரியவண்டுகள் அமர்ந்து யாழ் போலும் ஒலியினை உண்டாக்குகின்றன. முத்துக்களைக் கடலலைகள் கொண்டுவந்து குவிக்கின்றன. வெள்ளிய சங்குகள் உலாவுகின்றன. அந்தணர்கள் கூறும் வேதத்தைக்

கிளிகள் கேட்டுச் சொற்பழகுகின்றன. அவர்கள் செய்யும் வேள்வியிலுண்டாகும் புகையினால் ஆகாயமும் இருளைப் பெறுகின்றது. அன்னங்களும் விளையாடுகின்றன.

**தீர்த்தம்:-** முக்குளங்கள். இதன்கண் நீராடுபவர்களைத் தீவினைகள் தொடரா; பேய் முதலாகிய சிறுதெய்வச் செயல்கள் பயந்து ஓடும்; பெறுதற்கரிய பேருகிய மக்கட்பேறு உண்டாகும்; இவையன்றிப் பொதுவாக நினைத்தனவெல்லாம் கைகூடும். இதுபற்றி ஐயப்படவேண்டாம்.

**வழிபட்டோர்:-** விண்ணவர்கோன் (இந்திரன்), மறையவன் (சுவேதகேது), ஐராவதம் (வெள்ளயானை), தேவர்கள்.

**இயமதூதர்கள்:-** சுவேதகேது என்னும் மறையவனுக்கு இறைவன் அருள்பாலித்த பின்னர் இத்தூதுவர்கள் சிவனடியார்களைக் கண்டால் பிடித்தற்குப் பயப்படுவார்கள்.

திருநாவுக்கரசர் அருளிய திருக்குறுந்தொகைத் திருப்பதிகம் நெஞ்சத்தைப்

பார்த்துக் கூறுவதாக அமைந்துள்ளது. சுந்தரர் அருளிய திருப்பதிகம் ஒவ்வொரு பாடலும் இறைவனது சிறப்புக்களை முன்னர்க்கூறி இறுதியில் இத்தகைய நீ மனைகடோறுஞ் சென்று பலி ஏற்றதும், காமனை அழித்ததும், விடமுண்டதும், யானை யுரித்ததும், அனல்வடியாய் நின்றதும், வேதமோதியதும் எதற்காக என்று கேட்கும் முறையில் அமைந்துள்ளது.

வெண்காட்டீசன் என்று சொல்பவர்கள் ஒரு தீமையும் அடையப்பெற மாட்டார்கள். நன்மையே பெறுவார்கள்.

சிவமயம்

# திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் திருப்பதிகங்கள்

## பண் — சீகாமரம்

திருச்சிற்றம்பலம்

கண்காட்டு நுதலானுங் கனல்காட்டுங் கையானும்
பெண்காட்டு முருவானும் பிறைகாட்டுஞ் சடையானும்
பண்காட்டு மிசையானும் பயிர்காட்டும் புயலானும்
வெண்காட்டி லுறைவானும் விடைகாட்டுங் கொடியானே. ௧

பேயடையா பிரிவெய்தும் பிள்ளையினோ டுள்ளநினை
வாயினவே வரம்பெறுவ ரையுறவேண் டாவொன்றும்
வேயனதோ ளுமைபங்கன் வெண்காட்டு முக்குளநீர்
தோய்வினையா ரவர்தம்மைத் தோயாவாந் தீவினையே. ௨

மண்ணொடுநீ ரனல்காலோ டாகாய மதியிரவி
எண்ணில்வரு மியமான னிகபரமு மெண்டிசையும்
பெண்ணினொடாண் பெருமையொடு சிறுமையுமாம்பேராளன்
விண்ணவர்கோன் வழிபடவெண் காடிடமாவிரும்பினனே. ௩

விடமுண்ட மிடற்றண்ணல் வெண்காட்டின் றண்புறவின்
மடல்விண்ட முடத்தாழை மலர்நிழலைக் குருகென்று
தடமண்டு துறைக்கெண்டை தாமரையின் பூமறையக்
கடல்விண்ட கதிர்முத்த நகைகாட்டுங் காட்சியதே. ௪

வேலைமலி தண்கானல் வெண்காட்டான் றிருவடிக்கீழ்
மாலைமலி வண்சாந்தால் வழிபடுநன் மறையவன்றன்
மேலடர்வெங் காலனுயிர் விண்டபினை நமன்றூதர்
ஆலமிடற் றானடியா ரென்றடர வஞ்சுவரே. ௫

தண்மதியும் வெய்யரவுந் தாங்கினான் சடையினுடன்
ஒண்மதிய நுதலுமையோர் கூறுகந்தா னுறைகோயில்
பண்மொழியா லவனாமம் பலவோதப் பசுங்கிள்ளை
வெண்முகில்சேர்கரும்பெணைமேல்வீற்றிருக்கும்வெண்காடே. ௬

சக்கரமாற் கீந்தானுஞ் சலந்தரனைப் பிளந்தானும்
அக்கரைமே லசைத்தானு மடைந்தயிரா வதம்பணிய
மிக்கதனுக் கருள்சுரக்கும் வெண்காடும் வினைதுரக்கு
முக்குளநன் குடையானு முக்கணுடை யிறையவனே. ௭

பண்மொய்த்த வின்மொழியாள் பயமெய்த மலையெடுத்த
உன்மத்த னுரநெரித்தன் றருள்செய்தா னுறைகோயில்
கண்மொய்த்த கருமஞ்ஞை நடமாடக் கடன்முழங்க
விண்மொய்த்தபொழில்வரிவண் டிசைமுரலும்வெண்காடே. ௮

கள்ளார்செங் கமலத்தான் கடற்கிடந்தா னெனவிவர்கள்
ஒள்ளாண்மை கொளற்கோடியுயர்ந்தாழ்ந்துமுணர்வரியான்
வெள்ளானை தவஞ்செய்யு மேதகுவெண்காட்டானென்
றுள்ளாடி யுருகாதா ருணர்வுடைமை யுணரோமே. ௯

போதியர்கள் பிண்டியர்கண் மிண்டுமொழி பொருளென்னும்
பேதையர்க ளவர்பிரிமி னறிவுடையீ ரிதுகேண்மின்
வேதியர்கள் விரும்பியசீர் வியன்றிருவெண் காட்டானென்
றோதியவர் யாதுமொரு தீதிலரென் றுணருமினே. ௧௦

தண்பொழில்சூழ் சண்பையர்கோன் தமிழ்ஞான சம்பந்தன்
விண்பொலிவெண்பிறைச்சென்னிவிகிர்தனுறைவெண்காட்டைப்
பண்பொலிசெந் தமிழ்மாலை பாடியபத் திவைவல்லார்
மண்பொலிய வாழ்ந்தவர்போய் வான்பொலியப் புகுவாரே.

திருச்சிற்றம்பலம்.

### பண் — காந்தாரம்

திருச்சிற்றம்பலம்.

உண்டாய் நஞ்சை யுமையோர் பங்கா வென்றுள்கித்
தொண்டாய்த் திரியு மடியார் தங்க டுயரங்கள்
அண்டா வண்ண மறுப்பா னெந்தை யூர்போலும்
வெண்டா மரைமேற் கருவண் டியாழ்செய் வெண்காடே. க

நாத னம்மை யாள்வா னென்று நவின்றேத்திப்
பாதம் பன்னாள் பணியு மடியார் தங்கண்மேல்
ஏதந் தீர விருந்தான் வாழு மூர்போலும்
வேதத் தொலியாற் கிளிசொற் பயிலும் வெண்காடே. உ

தண்முத் தரும்பத் தடமூன் றுடையான் றனையுன்னிக்
கண்முத் தரும்பக் கழற்சே வடிகை தொழுவார்கள்
உண்முத் தரும்ப வுவகை தருவா னூர்போலும்
வெண்முத் தருவிப் புனல்வந் தலைக்கும் வெண்காடே. ங

நரையார் வந்து நாளுங் குறுகி நணுகாமுன்
உரையால் வேறா வுள்கு வார்க ளுள்ளத்தே
கரையா வண்ணங் கண்டான் மேவு மூர்போலும்
விரையார் கமலத் தன்ன மருவும் வெண்காடே. ௪

பிள்ளைப் பிறையும் புனலுஞ் சூடும் பெம்மானென்
றுள்ளத் துள்ளித் தொழுவார் தங்க ளுறுநோய்கள்
தள்ளிப் போக வருளுந் தலைவ னூர்போலும்
வெள்ளைச் சுரிசங் குலவித் திரியும் வெண்காடே. ௫

ஒளிகொண் மேனி யுடையா யும்ப ராளீயென்
றளிய ராகி யழுதுற் றூறு மடியார்கட்
கெளியா னமரர்க் கரியான் வாழு மூர்போலும்
வெளிய வுருவத் தானை வணங்கும் வெண்காடே. ௬

கோள்வித் தனைய கூற்றந் தன்னைக் குறிப்பினான்
மாள்வித் தவனை மகிழ்ந்தங் கேத்த மாணிக்காய்
ஆள்வித் தமர ருலக மளிப்பா னூர்போலும்
வேள்விப் புகையால் வான மிருள்கூர் வெண்காடே. ௭

வளையார் முன்கை மலையாள் வெருவ வரையூன்றி
முளையார் மதியஞ் சூடி யென்று முப்போதும்
இளையா தேத்த விருந்தா னெந்தை யூர்போலும்
விளையார் கழனிப் பழனஞ் சூழ்ந்த வெண்காடே. ௮

கரியா னோடு கமல மலரான் காணாமை
எரியாய் நிமிர்ந்த வெங்கள் பெருமா னென்பார்கட்
குரியா னமரர்க் கரியான் வாழு மூர்போலும்
விரியார் பொழிலின் வண்டு பாடும் வெண்காடே. ௯

பாடு மடியார் பலருங் கூடிப் பரி[illegible]தத்த
ஆடு மரவ மசைத்த பெருமா னறிவின்றி
மூட முடைய சமண்சாக் கியர்க ளுணராத
வேட முடைய பெருமான் பதியாம் வெண்காடே. ௧௦

விடையார் கொடியான் மேவி யுறையும் வெண்காட்டைக்
கடையார் மாடங் கலந்து தோன்றுங் காழியான்
நடையா ரின்சொன் ஞானசம் பந்தன் றமிழ்வல்லார்க்
கடையா வினைக ளமர லோக மாள்வாரே. ௧௧

திருச்சிற்றம்பலம்.

பண் — காந்தாரபஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

மந்திர மறையவை வான வரொடும்
இந்திரன் வழிபட நின்ற வெம்மிறை
வெந்தவெண் ணீற்றர்வெண் காடு மேவிய
அந்தமு முதலுடை யடிக ளல்லரே. க

படையுடை மழுவினர் பாய்புலித் தோலின்
உடைவிரி கோவண முகந்த கொள்கையர்
விடையுடைக் கொடியர்வெண் காடு மேவிய
சடையிடைப் புனல்வைத்த சதுர ரல்லரே. உ

பாலொடு நெய்தயிர் பலவு மாடுவர்
தோலொடு நூலிழை துதைந்த மார்பினர்
மேலவர் பரவுவெண் காடு மேவிய
ஆலம தமர்ந்தவெம் மடிக ளல்லரே. ங

ஞாழலுஞ் செருந்தியு நறுமலர்ப் புன்னையுந்
தாழைவெண் குருகய றயங்கு கானலில்
வேழம துரித்தவெண் காடு மேவிய
யாழின திசையுடை யிறைவ ரல்லரே. ௪

பூதங்கள் பலவுடைப் புனிதர் புண்ணியர்
ஏதங்கள் பலவிடர் தீர்க்கு மெம்மிறை
வேதங்கண் முதல்வர்வெண் காடு மேவிய
பாதங்க டொழநின்ற பரம ரல்லரே. ௫

மண்ணவர் விண்ணவர் வணங்க வைகலும்
எண்ணிய தேவர்க ளிறைஞ்சு மெம்மிறை
விண்ணமர் பொழில்கொள்வெண் காடு மேவிய
அண்ணலை யடிதொழ வல்ல லில்லையே. ௬

நயந்தவர்க் கருள்பல நல்கி யிந்திரன்
கயந்திரம் வழிபட நின்ற கண்ணுதல்
வியந்தவர் பரவுவெண் காடு மேவிய
பயந்தரு மழுவுடைப் பரம ரல்லரே. எ

மலையுட னெடுத்தவல் லரக்க னீண்முடி
தலையுட னெரித்தருள் செய்த சங்கரர்
விலையுடை நீற்றர்வெண் காடு மேவிய
அலையுடைப் புனல்வைத்த வடிக ளல்லரே. அ

ஏடவிழ் நறுமல ரயனு மாலுமாய்த்
தேடவுந் தெரிந்தவர் தேர கிற்கிலார்
வேடம துடையவெண் காடு மேவிய
ஆடலை யமர்ந்தவெம் மடிக ளல்லரே. கூ

போதியர் பிண்டியர் பொருத்த மில்லிகள்
நீதிகள் சொல்லியு நினைய கிற்கிலார்
வேதியர் பரவுவெண் காடு மேவிய
ஆதியை யடிதொழ வல்ல லில்லையே. ௰

நல்லவர் புகலியுண் ஞானசம் பந்தன்
செல்வனெஞ் சிவனுறை திருவெண் காட்டின்மேற்
சொல்லிய வருந்தமிழ் பத்தும் வல்லவர்
அல்லலோ டருவினை யறுத லாணையே. ௧௧

திருச்சிற்றம்பலம்.

சிவமயம்.

# திருநாவுக்கரசு சுவாமிகள் திருப்பதிகங்கள்

## திருக்குறுந்தொகை

### திருச்சிற்றம்பலம்



பண்காட் டிப்படி யாயதன் பத்தர்க்குக்
கண்காட் டிக்கண்ணி னின்ற மணியொக்கும்
பெண்காட் டிப்பிறைச் சென்னிவைத் தான்றிரு
வெண்காட் டையடைந் துய்ம்மட நெஞ்சமே. க

கொள்ளி வெந்தழல் வீசிநின் றாடுவார்
ஒள்ளி யகணஞ் சூழுமை பங்கனார்
வெள்ளி யன்கரி யன்பசு வேறிய
தெள்ளி யன்றிரு வெண்கா டடைநெஞ்சே. உ

ஊனேக் குமின்பம் வேண்டி யுழலாதே
வானேக் கும்வழி யாவது நின்மினே
தானேக் குந்தன் னடியவர் நாவினிற்
றேனேக் குந்திரு வெண்கா டடைநெஞ்சே. ௩

பருவெண் கோட்டுப்பைங் கண்மத வேழத்தின்
உருவங் காட்டிநின் ருனுமை யஞ்சவே
பெருவெண் காட்டிறை வன்னுறை யும்மிடந்
திருவெண் காடடைந் துய்ம்மட நெஞ்சமே. ௪



பற்ற வன்கங்கை பாம்பு மதியுடன்
உற்ற வன்சடை யானுயர் ஞானங்கள்
கற்ற வன்கய வர்புர மோரம்பாற்
செற்ற வன்றிரு வெண்கா டடைநெஞ்சே. ௫

கூடி னானுமை யாளொரு பாகமாய்
வேட னாய்விச யற்கருள் செய்தவன்
சேட னார்சிவ னார்சிந்தை மேயவெண்
காட னாரடி யேயடை நெஞ்சமே. ௬

தரித்த வன்கங்கை பாம்பு மதியுடன்
புரித்த புன்சடை யான்கய வர்புரம்
எரித்த வன்மறை நான்கினோ டாறங்கம்
விரித்த வன்னுறை வெண்கா டடைநெஞ்சே. ௭

பட்ட மிண்டை யவைகொடு பத்தர்கள்
சிட்ட னாதியென் றுசிந்தை செய்யவே
நட்ட மூர்த்திஞா னச்சுட ராய்நின்ற
அட்ட மூர்த்திதன் வெண்கா டடைநெஞ்சே. ௮

என வேடத்தி னானும் பிரமனுந்
தான வேடமுன் றாழ்ந்தறி கின்றிலா
ஞான வேடன் விசயற் கருள்செயுங்
கான வேடன்றன் வெண்கா டடைநெஞ்சே. ௯

பாலை யாடுவர் பன்மறை யோதுவர்
சேலை யாடிய கண்ணுமை பங்கனார்
வேலை யார்விட முண்டவெண் காடர்க்கு
மாலை யாவது மாண்டவ ரங்கமே. க0

இராவ ணஞ்செய மாமதி பற்றவை
யிராவ ணம்முடை யான்றனை யுள்குமின்
இராவ ணன்றனை யூன்றி யருள்செய்த
இராவ ணன்றிரு வெண்கா டடைமினே. கக

திருச்சிற்றம்பலம்.

## திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

தூண்டு சுடர்மேனித் தூநீ றாடிச்
 சூலங்கை யேந்தியோர் சுழல்வாய் நாகம்
பூண்டு பொறியரவங் காதிற் பெய்து
 பொற்சடைக ளவைதாழப் புரிவெண் ணூலர்
நீண்டு கிடந்திலங்கு திங்கள் சூடி
 நெடுந்தெருவே வந்தெனது நெஞ்சங் கொண்டார்
வேண்டு நடைநடக்கும் வெள்ளே றேறி
 வெண்காடு மேவிய விகிர்த னாரே. க

பாதந் தனிப்பார்மேல் வைத்த பாதர்
 பாதாள மேழுருவப் பாய்ந்த பாதர்
ஏதம் படாவண்ண நின்ற பாதர்
 ஏழுலகு மாய்நின்ற வேகபாதர்
ஓதத் தொலிமடங்கி யூருண் டேறி
 யொத்துலக மெல்லா மொடுங்கியபின்
வேதத் தொலிகொண்டு வீணை கேட்பார்
 வெண்காடு மேவிய விகிர்த னாரே. உ

நென்னலையோ ரோடேந்திப் பிச்சைக் கென்று
வந்தார்க்கு வந்தேனென் றில்லே புக்கேன்
அங்கிலையே நிற்கின்றா ரையங் கொள்ளார்
அருகே வருவார்போ னோக்கு கின்றார்
நுங்கிலைமை யேதோநும் மூர்தா னேதோ
வென்றேனுக் கொன்றாகச் சொல்ல மாட்டார்
மென்முலையார் கூடி விரும்பி யாடும்
வெண்காடு மேவிய விகிர்த னாரே. ௫

ஆகத் துமையடக்கி யாறு சூடி
யைவா யரவசைத்தங் கானே றேறிப்
போகம் பலவுடைத்தாய்ப் பூதஞ் சூழப்
புலித்தோ லுடையாப் புகுந்து நின்றார்
பாகிடுவான் சென்றேனைப் பற்றி நோக்கிப்
பரிசழித்தென் வளைகவர்ந்தார் பாவி யேனை
மேக முகி லுரிஞ்சு சோலை சூழ்ந்த
வெண்காடு மேவிய விகிர்த னாரே. ௬

கொள்ளைக் குழைக்காதிற் குண்டைப் பூதங்
கொடுகொட்டி கொட்டிக் குனித்துப் பாட
உள்ளங் கவர்ந்திட்டுப் போவார் போல
வுழிதருவர் நான்றெரிய மாட்டேன் மீண்டேன்
கள்ள விழிப்பர் காணாக் கண்ணாற்
கண்ணாளார் போலே கரந்து நிற்பர்
வெள்ளச் சடைமுடியர் வேத நாவர்
வெண்காடு மேவிய விகிர்த னாரே. ௫

தொட்டிலங்கு சூலத்தர் மழுவா ளேந்திச்
சுடர்க்கொன்றைத் தாரணிந்து சுவைகள் பேசிப்
பட்டிவெள் ளேறேறிப் பலியுங் கொள்ளார்
பார்ப்பாரைப் பரிசழிப்பா ரொக்கின் றாராற்
கட்டிலங்கு வெண்ணீற்றர் கனலப் பேசிக்
கருத்தழித்து வளைகவர்ந்தார் காலை மாலை
விட்டிலங்கு சடைமுடியர் வேத நாவர்
வெண்காடு மேவிய விகிர்த னாரே. ௬

பெண்பா லொருபாகம் பேணா வாழ்க்கை
கோணாகம் பூண்பனவு நாணாஞ் சொல்லார்
உண்பா றுறங்குவா ரோவ்வா நங்கா
யுண்பதுவு நஞ்சென்றே லோபி யுண்ணார்
பண்பால் விரிசடையர் பற்றி நோக்கிப்
பாலைப் பரிசழியப் பேசு கின்றார்
விண்பான் மதிசூடி வேத மோதி
வெண்காடு மேவிய விகிர்த னாரே. ஏ

மருதங்க ளாமொழிவர் மங்கை யோடு
வானவரு மாலயனுங் கூடித் தங்கள்
சுருதங்க ளாற்றுதித்துத் தூநீ ராட்டித்
தோத்திரங்கள் பலசொல்லித் தூபங் காட்டிக்
கருதுங்கொ லெம்பெருமான் செய்குற் றேவ
லென்பார்க்கு வேண்டும் வரங்கொ டுத்து
விகிர்தங்க ளாநடப்பர் வெள்ளே றேறி
வெண்காடு மேவிய விகிர்த னாரே. அ

புள்ளாறு நான்முகனும் புக்கும் போந்துங்
காணார் பொறியழலாய் நின்றான் றன்னை
உள்ளானை யொன்றலா வுருவி னானை
யுலகுக் கொருவிளக்காய் நின்றான் றன்னைக்
கள்ளேந்து கொன்றைதாய்க் காலை மூன்று
மோவாமே நின்று தவங்கள் செய்த
வெள்ளானை வேண்டும் வரங்கொ டுப்பார்
வெண்காடு மேவிய விகிர்த னாரே. ௯

மாக்குன் றெடுத்தோன்றன் மைந்த னாகி
மாவேழம் வில்லா மதித்தான் றன்னை
நோக்குந் துணைத்தேவ ரெல்லா நிற்க
நொடிவரையி னோவ விழித்தான் றன்னைக்
காக்குங் கடலிலங்கைக் கோமான் றன்னைக்
கதிர்முடியுங் கண்ணும் பிதுங்க வூன்றி
வீக்கந் தவிர்த்த விரலார் போலும்
வெண்காடு மேவிய விகிர்த னாரே. ௰

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்

# சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருப்பதிகம்

**பண் — இந்தளம்.**

திருச்சிற்றம்பலம்

படங்கொணாகஞ் சென்னிசேர்த்திப்
பாய்புலித்தோ லரையில்வீக்கி
அடங்கலாரூ ரெரியச்சீறி
யன்றுமூவர்க் கருள்புரிந்தீர்
மடங்கலானைச் செற்றுகந்தீர்
மனைகடோறுந் தலைகையேந்தி
விடங்கராகித் திரிவதென்னே
வேலைசூழ்வெண் காடனீரே. க

இழித்துகந்தீர் முன்னைவேட
மிமையவர்க்கு முறைகள்பேணா
தொழித்துகந்தீர் நீர்முன்கொண்ட
வுயர்தவத்தை யமரர்வேண்ட
அழிக்கவந்த காமவேளை
யவனுடைய தாதைகாண
விழித்துகந்த வெற்றியென்னே
வேலைசூழ்வெண் காடனீரே. உ

படைகளேந்திப் பாரிடமும்
பாதம்போற்ற மாதுநீரும்
உடையோர்கோவ ணத்தராகி
யுண்மைசொல்லீ ரும்மையன்றே
சடைகடாழக் கரணமிட்டுத்
தன்மைபேசி யில்பலிக்கு
விடையதேறித் திரிவதென்னே

பண்ணுளீராய்ப் பாட்டுமானீர்
பத்தர்சித்தம் பரவிக்கொண்டீர்
கண்ணுளீராய்க் கருத்திலும்மைக்
கருதுவார்கள் காணும்வண்ணம்
மண்ணுளீராய் மதியம்வைத்தீர்
வானநாடர் மருவியேத்த
விண்ணுளீராய் நிற்பதென்னே
வேலைசூழ்வெண் காடனீரே. ௪

குடமெடுத்து நீரும்பூவுங்
கொண்டுதொண்ட ரேவல்செய்ய
நடமெடுத்தொன் றாடிப்பாடி
நல்குவீர்நீர் புல்கும்வண்ணம்
வடமெடுத்த கொங்கைமாதோர்
பாகமாக வார்கடல்வாய்
விடமிடற்றில் வைத்ததென்னே
வேலைசூழ்வெண் காடனீரே. ௫

மாறுபட்ட வனத்தகத்தின்
மருவவந்த வன்களிற்றைப்
பீறியிட்ட மாகப்போர்த்தீர்
பெய்பலிக்கென் றில்லந்தோறுங்
கூறுபட்ட கொடியுநீருங்
குலாவியேற்றை யடரவேறி
வேறுபட்டுத் திரிவதென்னே
வேலைசூழ்வெண் காடனீரே. ௬

காதலாலே கருதுந்தொண்டர்
காரணத்த ராகிநின்றே
பூதம்பாடப் புரிந்துநட்டம்
புவனியேத்த வாடவல்லீர்
நீதியாக வேழிலோசை
நித்தராகிச் சித்தர்சூழ
வேதமோதித் திரிவதென்னே
வேலைசூழ்வெண் காடனீரே. ௭

குரவுகொன்றை மதியமத்தங்
கொங்கைமாதர் கங்கைநாகம்
விரவுகின்ற சடையுடையீர்
விருத்தரானீர் கருத்திலும்மைப்
பரவுமென்மேற் பழிகள்போக்கீர்
பாகமாய மங்கையஞ்சி
வெருவவேழஞ் செற்றதென்னே
வேலைசூழ்வெண் காடனீரே. ௮

மாடங்காட்டுங் கச்சியுள்ளீர்
நிச்சயத்தா னினைப்புளார்பாற்
பாடுங்காட்டி லாடலுள்ளீர்
பரவும்வண்ண மெங்ஙனேதான்
நாடுங்காட்டி லயனுமாலு
நணுகாவண்ண மனலுமாய
வேடங்காட்டித் திரிவதென்னே
வேலைசூழ்வெண் காடனீரே. ௯

விரித்தவேத மோதவல்லார்
வேலைசூழ்வெண் காடுமேய
விருத்தனாய வேதன்றன்னை
விரிபொழிற்றிரு நாவலூரன்
அருத்தியாலா ரூரன்றொண்ட
னடியன்கேட்ட மாலைபத்துந்
தெரித்தவண்ண மொழியவல்லார்
செம்மையாளர் வானுளாரே. க0

திருச்சிற்றம்பலம்



ஞானசம்பந்தம் பிரஸ், தருமபுரம், C. 500. 31—3—46.